பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 07 2026 SUNDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச்செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ், மாநிலங்களுக்கான முதல் தவணைத் தொகையை மத்திய அரசு இன்று விடுவித்துள்ளது.

2) தமிழகத்தின் வளர்ச்சிக்காக, மத்திய அரசுடன் த.வெ.க. அரசு இணக்கமாக பணியாற்றும் என்று மாநில அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

3) சிறுபான்மையினர் நலன்களை பாதுகாப்பதில் உறுதியுடன் உள்ளதாக திமுக தெரிவித்துள்ளது.

4) தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகியுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

5) 20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ், மாநிலங்களுக்கான முதல் தவணைத் தொகையை மத்திய அரசு இன்று விடுவித்துள்ளது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான், காணொலி வாயிலாக 25 ஆயிரத்து 863 கோடி ரூபாயை மாநிலங்களுக்கு விடுவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த திட்டத்தின் கீழ் பணியாளர்களுக்கு 15 நாட்களுக்குள் ஊதியம் வழங்க இந்த தொகை உதவிடும் என்று கூறினார்.

மாநில அரசும் இந்த திட்டத்திற்கான தங்களது பங்களிப்பை குறித்த காலத்திற்குள் விடுவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நாடுமுழுவதும் கடந்த ஒன்றாம் தேதி முதல் இந்த திட்டம் செயல்பாட்டுக்கு வந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

ஆந்திரா, கேரளா மற்றும் ராஜஸ்தான் மாநிலங்கள் முதல் நாளிலேயே ஏராளமான வேலைவாய்ப்புகளை இந்த திட்டத்தின்கீழ் வழங்கியது பாராட்டுதலுக்குரியது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் ஊதியம், 10 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன்மூலம், பணியாளர்களுக்கான ஊதியம் குறைந்தது, நாளொன்றுக்கு 300 ரூபாய் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

>>>>><<<<<

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் முன்னேற்றத்திற்கு ஜன சங்கத்தின் நிறுவனர் டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜி ஆற்றிய பணி இன்றியமையாதது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற டாக்டர் சியாமா பிரசாத் முகர்ஜியின் பிறந்த நாள் விழா கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சியாமா பிரசாத் முகர்ஜியின் அர்ப்பணிப்பும், தியாகமும் இன்றளவும் நமக்கு வழிகாட்டியாக உள்ளது என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தின் வளர்ச்சிக்காக மத்திய அரசுடன் த.வெ.க. அரசு இணக்கமாக பணியாற்றும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம், நல்லக்கவுண்டன்பாளையத்தில் நியாயவிலைக் கடையை திறந்து வைத்து அவர் பேசினார்.

உரங்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் எச்சரித்தார்.

>>>>><<<<<

சிறுபான்மையினர் நலன்களை பாதுகாப்பதில் திமுக உறுதியுடன் உள்ளதாக அக்கட்சியின் இளைஞரணிச் செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னையை அடுத்த திருவேற்காட்டில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இஸ்லாமியர்களுக்கும், திமுகவுக்கு உள்ள உறவினை எந்த சக்தியாலும் பிரிக்க முடியாது என்று தெரிவித்தார்.

>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கேள்விக் குறியாகியுள்ளதாக அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், சமீபத்தில் நடைபெற்ற குற்றச் சம்பவங்களை பட்டியலிட்டுள்ளது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களை தடுக்க த.வெ.க. அரசு தவறிவிட்டதாகவும் அஇஅதிமுக அந்த அறிக்கையில் குறை கூறியுள்ளது.

>>>>><<<<<

என்-நினோ தாக்கத்தை எதிர்கொள்வதற்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை த.வெ.க. அரசு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசு இதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் த.வெ.க அரசும் பேரிடர் மேலாண்மை பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் என்றும் பிஜேபி அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

மத்திய அரசின் முத்ரா கடனுதவி திட்டத்தின் மூலம், சிறு வணிகர்கள் அதிக அளவில் பயனடைந்து வருகின்றனர்.

தங்களின் தொழில் வளர்ச்சிக்கு இந்த திட்டம் பெரிதும் உதவிகரமாக உள்ளது என்று தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

>>>>><<<<<

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப் பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளது.

இது, அடுத்த 24 மணி நேரத்தில் ஒடிசா - சத்திஷ்கர் கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

கடலூர் மாவட்டம், பண்ருட்டி அருகே நேரிட்ட சாலை விபத்தில் 4 பேர் உயிரிழந்தனர்.

>>>>><<<<<

தஞ்சாவூரில் நடைபாதை உணவு வணிகர்களுக்கான, உணவு பாதுகாப்பு பயிற்சி மற்றும் பதிவு சான்றிதழ் வழங்கும் முகாம் இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

மயிலாடுதுறை மாவட்டத்தில் ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த பிரம்மபுரீஸ்வரர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>><<<<<

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கர்நாடகாவிலிருந்து கடத்தி வரப்பட்ட ஒரு டன் போதைப்பொருளை பறிமுதல் செய்த காவல்துறையினர், இருவரை கைது செய்தனர்.

>>>>><<<<<

பராமரிப்புப் பணிகள் காரணமாக, சென்னை கடற்கரை - தாம்பரம் -செங்கல்பட்டு வழித்தடத்தில் 41 மின்சார ரயில் சேவைகள் இன்று ரத்து செய்யப்பட்டன.

>>>>><<<<<

சேலம் மாவட்டம், எடப்பாடி அருகே உள்ள பூலாம்பட்டி படகு துறையில் சுற்றுலாப் பயணிகள் இன்று குவிந்தனர்.

>>>>><<<<<

தென்காசி மாவட்டம், குற்றாலம் அருவிகளில் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

20 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 70 கிலோ எடைப்பிரிவில் Sumith Kumar Lakshman தங்கப்பதக்கம் வென்றார்.

61 கிலோ எடைப்பிரிவில் Pushp-பும், 79 கிலோ எடைப்பிரிவில் Saurabh Yadav-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

57 கிலோ எடைப்பிரிவில் Rohit-ம், 74 கிலோ எடைப்பிரிவில் Adarsh Yuvraj Patil-லும், 97 கிலோ எடைப்பிரிவில் Lacky-யும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>>><<<<<

இஸ்தான்புல்லில் நடைபெற்ற சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Swastika Ghosh – Taneesha Kotecha இணை பட்டம் வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 11-8, 11-8, 11-7 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் Shuohan Men - ஸ்லோவேனியாவின் Ana Tofant இணையை வென்றது.

>>>>><<<<<

இலங்கை-ஏ அணிக்கு எதிரான இரண்டாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா-ஏ அணி 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

>>>>><<<<<

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அங்கிதா ரெய்னா - ஜப்பானின் Hiroko Kuwata இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 1-6, 10-7 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Reese Brantmeier - Alanis Hamilton இணையை வென்றது.

>>>>><<<<<

உலக கோப்பை கூடைப்பந்து தகுதிச் சுற்று போட்டியில், இந்தியா இன்று லெபனானை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

மாநில அளவிலான Speed Skating போட்டி காஞ்சிபுரத்தில் இன்று தொடங்கியது.

6 முதல் 18 வயதுக்குட்பட்டோருக்கான 700-க்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>><<<<<

உலக பேட்மிண்டன் தினம் இன்று கொண்டாடப்பட்டது.

>>>>>END<<<<<